# பன்முக நோக்கில்

# தமிழ் இலக்கியம்




பதிப்பாசிரியர்

முனைவர் த. கீதாஞ்சலி

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

வைரவிழாவை முன்னிட்டு

தமிழ்த்துறை (சுயநிதி)

நடத்திய

Dr. P. MAHESWARI
Associate Professor
Dept. of Tamil
N.G.M. College, Pollachi.

# பன்முக நோக்கில் தமிழ் இலக்கியம்

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2018

கட்டுரைத் தொகுப்புகள்

பதிப்பாசிரியர்

**முனைவர் த. கீதாஞ்சலி**

பதிப்புக்குழு

**முனைவர் த. பரமேசுவரி**

**முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா**

**முனைவர் ம. சித்ரகலா**

**முனைவர் ந. பிரகாஷ்**

**முனைவர் மு. சுகந்தி**

**முனைவர் ந. ஜெயசுதா**

**முனைவர் இரா. ஜெயந்தி**

**பேரா. ர. சூர்யா**

Estd : 1957

**தமிழ்த்துறை (சுயநிதி)**

**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)**

(தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'ஏ' தகுதி,

ஐ.எஸ்.ஓ. 9001-2015 தரச்சான்றிதழ் பெற்றது)

பொள்ளாச்சி - 642 001.

**பன்முக நோக்கில் தமிழ் இலக்கியம்**
(பன்னாட்டுக் கருத்தரங்கம்)

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | முனைவர் த. கீதாஞ்சலி |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர் |
| முதற்பதிப்பு | : | ஜூலை 2018 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி<br>பொள்ளாச்சி - 642 001. |
| பக்கங்கள் | : | 244 |
| விலை | : | |
| அச்சிட்டோர் | : | காவேரிடெக் கணிப்பொறி அச்சுக்கூடம்<br>21/2, ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி. |

**ISBN No. : 9789387009271**

**PANMUKA NOKKIL THAMIZH ILAKKIYAM**
(International Seminar)

| | | |
|---|---|---|
| Editor | : | Dr. T. Geethanjali |
| Copyright's | : | Editor |
| First Edition | : | July 2018 |
| Published | : | Tamil Department<br>Nallamuthu Gounder Mahalingam College,<br>Pollachi - 642 001. |
| Pages | : | 244 |
| Price | : | |
| Printing at | : | Cauveritech Computerised Print Shop<br>21/2, Rajamill Road, Pollachi. |

36. இலக்கியங்களில் நம்பிக்கை
- சி. சிவகுமாரி 191

37. அமுதன் படைப்புகளில் காந்தியச் சிந்தனைகள்
- ந. சூர்யா 196

38. நற்றிணையில் மாந்தர்கள்
- நா. ஸ்ரீபிரியா 201

39. சிலப்பதிகாரக் காப்பியப் பெண் மாந்தர்களின் உளப்பகுப்பாய்வு
- பி. சுகன்யா 205

40. மூன்றாம் நதி நாவல் காட்டும் சமூகம்
- முனைவர் ப. தமிழரசி 209

41. தமிழர் சமயம்
- முனைவர் மா. வள்ளி 213

42. நானில மக்களின் தொழில் மேம்பாட்டிற்கு பெண்களின் பங்களிப்பு
- சு. வாசுகி 217

43. நாட்டுப்புறப் பாடல்களில் கூந்தல் புனைவு
- முனைவர் கோ. வெற்றிச்செல்வி 222

44. குறுந்தொகையில் தலைவியின் நிலை
- ஜெ. வினோதினி 227

45. சங்க இலக்கியத்தில் கடையெழுவள்ளல்களின் பண்புநலன்
- முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா 232

46. தமிழர்களின் நீரியல் திறன்
- முனைவர் ந. பிரகாஷ் 237

# 37 அமுதன் படைப்புகளில் காந்தியச் சிந்தனைகள்

**ர. சூர்யா**
தமிழ் உதவிப் பேராசிரியர்,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

இளம் வயதிலேயே காந்தியடிகளின் செயல்பாடுகளைக் கண்டு தன்னையும் அவரது வழியிலேயே ஈடுபடுத்திக் கொண்டு காந்தியத் தொண்டராக வாழ்ந்தவர், அருட்செல்வர்.நா.மகாலிங்கம். இவர் அருகாமையில் இருந்து கொண்டு பணியாற்றிய அமுதன் காந்திய வழியில் தான் கண்ட சிந்தனைகள் அனைத்தும் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் அமைய வேண்டும் என எண்ணி அவற்றைக் கட்டுரை வடிவில் வெளியிட்டார். காந்தியச் சிந்தனைகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

காந்தியடிகளுக்கு 'மகாத்மா' என்ற பட்டத்தைச் சூட்டியவர் இரவீந்திரநாத் தாகூர் ஆவார். மகாத்மா என்ற சொல்லிற்கு "உயர்ந்த ஆன்மஞானி" சிறந்த ஒரு குறிக்கோளுக்காக வாழ்வை அர்ப்பணித்த பெரியோர்" (பேரகராதி, ப.767) என்று பேரகராதி பொருள் கூறுவதை அறியமுடிகிறது.

'கல்வி முறை, பெற்றோரைப் பேணுதல், அகிம்சை வழி, கடவுட்கோட்பாடு, இச்சை, போதை பொருள் போன்றவற்றின் சிந்தனைகள் பற்றிய செய்திகள் கீழ்க்காணுமாறு அமைகின்றன.

## அகிம்சை

அகிம்சை என்பது அ + இம்சை = இம்சை செய்யாதிருத்தல் என்பது பொருள். மேலும் வருத்தாமை, ஊறு இழைக்காமை, கொல்லாமை, அறவழி, துன்பம் செய்யாமை, அன்பு செய்தல் போன்ற பொருள்களும் தருகின்றது. பொதுவாகக் கூறினால் உயிரினைத் துன்பம் செய்யாது இருத்தலாகும். அப்படிப்பட்ட இவ்வகிம்சையையே காந்தியடிகள் பெரும் ஆயுதமாகக் கையில் ஏந்திப் பிடித்துக் கொண்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுத்தந்தார்.

'காந்தி என்றால் அகிம்சை, அகிம்சை என்றால் காந்தி' என்ற பழமொழியும் கூட வழக்கில் இருந்து கொண்டுதான் இருக்கின்றது.

'தன்னம்பிக்கை' என்ற கட்டுரையில் "மனிதனுக்கு மூன்று கைகள் உண்டு மூன்றாவது கைதான் தன்னம்பிக்கை" (நல்லது செய் மனமே, ப.39) என்று அமுதன் குறிப்பிட்டுள்ளார். மனிதனானவன் எப்போதும் தன்னம்பிக்கையுடன் இருத்தல் என்பது மிகவும் அவசியம். தோல்வியோ வெற்றியோ அந்தத் தன்னம்பிக்கையே இதற்கு வழிகாட்டுகிறது. காந்தியடிகள் தனது சுதந்திரப் போராட்டத்திற்கு அகிம்சையாகக் கைராட்டையைப் பயன்படுத்தி வெற்றிகண்டார். இதனை,

"நம்பிக்கை என்றொரு கை
ராட்டை சுற்றுவோம் - கை
ராட்டை சுற்றுவோம்! - நம்
நாட்டை வெல்லுவோம். என்ற காந்தியின் நம்பிக்கை வென்றதா? இல்லையா? வரலாற்றை விசாரித்துப் பாருங்கள்" (மேலது.ப.40) என அமுதன் குறிப்பிட்டு வினா எழுப்பியதன் மூலம், இந்தியாவில் ஆங்கிலேயரின் கலாச்சாரமும், உடைகளும் மக்களை ஆண்டு, அடிமைப்படுத்தி வைத்திருந்த நிலையில், இதனைக் கண்ட காந்தியடிகள் மக்களுக்கு அந்திய ஆடைகளின் மோகத்தின் தீச்செயல்களை எடுத்துக் கூறி, அதனைத் தடுத்து நிறுத்தி அவர்களைத் தோற்கடித்து விரட்ட வேண்டும் என எண்ணியே ராட்டை (கைராட்டை) என்பதனைச் சுற்றி கதர் ஆடையை உடுத்தச் செய்து தன்னம்பிக்கை மூலம் வெற்றி அடைந்தோம் என களிகூற முடிகிறது.

## அண்ணலின் கல்விமுறைச் சிந்தனை

காந்தியடிகளின் கல்விமுறையில் கல்வியின்போதே அதனோடு தொழிலையும் ஈடுபடுத்திக் கற்பித்தல் வேண்டுமென்பது ஒரு முறையாகவே இருந்தது. படிக்கும் பொழுதே மாணவர்கள் உழைத்து குடும்பத்திற்கு வருமானத்தை ஏற்படுத்தித்தரும் அளவிற்கு தன்னம்பிக்கையை அளிக்கும் வண்ணம் காந்தியடிகளின் கல்விமுறை நடைபெற்றது. மேலும் பள்ளிக்கூடத்தைச் சுற்றியுள்ள பொருட்களையும், வளங்களையும் மட்டுமே பள்ளியானது பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற முறையும் இருந்தது. இதன்மூலம் எண்ணற்ற தொகைகள் சேமிக்கப்பட்டது.

மேலும், இன்னொரு வசதி என்னவெனில், மாணவர்கள் எத்தொழிலைத் தேர்ந்தெடுக்கின்றாரோ அத்தொழிலின் மூலமாகவே அனைத்துப் பாடங்களும் கற்பிக்க வேண்டும் என்ற நிலை அனைவருக்கும் பயன்படும் வகையில் அமைந்திருந்தன. இந்திய மக்களின் பொருளாதாரப் பிரச்சினையைச் சற்று குறைக்க வேண்டும்

என்ற எண்ணம் கொண்ட காந்தியடிகள், கல்வி பாதி, தொழில் பாதி என்று மக்களின் நிலைகளில் கல்வி நிலைகளை வகுத்து, அவர்களோடு புகுத்தி, மக்களை மேன்மையடையச் செய்தார் என்பதையும், மக்களின் ஆதாரத்திற்கென உருவாக்கப்பட்டதே ஆதாரக்கல்வி முறை என்பதையும் அறியமுடிகிறது.

"உடல், உள்ளம் இரண்டின் வளர்ச்சிக்கும் ஓயாது உழைப்பதே உண்மைக்கல்வி, மாணவர்கள் மனதில் ஒழுக்கத்தை வளர்ப்பதே கல்வியின் உன்னத நோக்கமாக இருக்க வேண்டும். என்கிறார் நம் தேசப்பிதா காந்தியடிகள்" (அறம் எனப்படுவது ப.5) என அமுதன் குறிப்பிட்டுள்ளதிலிருந்து உடல், உள்ளம் என்ற இரண்டிற்கும் வளர்ச்சி ஏற்படக் கற்பதே உண்மையான கல்வி என்பதை அறியமுடிகிறது.

இக்கூற்றினை 'வேண்டும் அறிவியல் கல்வி' என்ற கட்டுரையிலிருந்து எடுத்துக்காட்டியுள்ளதால், காந்தியடிகள் அறிவியல் துறையில் மேலும் மேலும் மாணவர்களின் உடல், உள்ளம் போன்றவை ஈடுபட்டு தானும் வளர்ந்து, அறிவியல் துறையினையும் வளர்த்து விடவேண்டும் என்ற சிந்தனையையும் பெற்றுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

## ஆசை என்ற இச்சைநிலை

ஆசை என்பது ஒவ்வொருவரையும் பிடித்திருக்கும் பேய் போன்றது. அது மனிதனிடத்தில் குடிகொண்டு விட்டால் மனிதனின் நாட்கள் தினமும் நரகம்தான். புத்தர் 'ஆசையே அழிவிற்குக் காரணம்' என்று கூறினார். திருமூலரோ 'ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்' என்று கூறினார்.

இவ்வாறு ஆசை என்ற இச்சை நிலையானது எவ்வாறு உயிர்களிடத்தில் மாறுபடுகிறது என்பதை உணர்த்தும் விதமாக சிட்டுக்குருவியின் வாழ்க்கையையும், மனிதனின் வாழ்வையும் ஒப்புமைப்படுத்தி இரண்டுக்கும் இடையே ஆசை, பற்று, இச்சை போன்ற நிலைகள் எவ்வாறு அமைந்துள்ளதனைப் பற்றி, 'விட்டு விடுதலையாகி நிற்போம்' (ப.26) என்ற கட்டுரையில் அமுதன் எடுத்துரைத்துள்ளார்.

## அண்ணலின் கடவுட் கோட்பாட்டுச் சிந்தனை

பொதுவாக, கோட்பாடு என்பது ஒன்றிற்குத் தரப்பட்டுள்ள விதிமுறைகளின்படி கொள்கையை ஏற்படுத்திக் கொண்டு அதன்படி நடத்தலாகும். ஆனால் இங்கு காந்தியடிகளின் கடவுட் கோட்பாடு பற்றிய சிந்தனைகளை அமுதன் படைப்புகளின் வழியே மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க அறிவுக் கொள்கையாக சில மட்டுமே எடுத்துரைக்கப்படுகிறது.

மனிதனின் அறிவாற்றல் மட்டுமே இறைவனுக்கு திருப்தி அளிக்கும் வண்ணம் இருப்பதில்லை. அவனுடைய மனதில் ஏற்படக்கூடிய உண்மையான அன்பின்வழி வரக்கூடிய உருக்கமே இறைவனை அடையச் செய்கிறது. இதனை, "அறிவாற்றல் மட்டும் கடவுளைத் திருப்தி செய்துவிடுவதில்லை. இதய நெகிழ்வே அவரை நெகிழ்விப்பது" (அறம் எனப்படுவது, ப.45) என அமுதன் குறிப்பிடுவதின் மூலம் மனிதனின் அறிவாற்றலைவிட அவனது அன்பின் ஆற்றலே இறைவனை மகிழ்விக்கிறது என்பதை நன்கு உணரமுடிகிறது.

## பெற்றோரைப் பேணும் சிந்தனை

இராமாயணக் காப்பியத்தைப் படித்ததில் இருந்து ராம்ராஜ்ஜியம் நடைபெற வேண்டும் என விரும்பினார். அரிச்சந்திரன் நாடகம், அவரை வாழ்வில் உண்மையை மட்டுமே பேசுபவனாகச் சத்தியவானாக வாழவைத்தது. சிரவணன் நாடகம் அவருக்குப் பெற்றோரைப் பேணவேண்டும் என்ற எண்ணம் வளர முக்கியமான காரணமாக இருந்தது. தனது வாழ்வில் பெற்றோர் மிகவும் முக்கியம் என்று தன்னையே பலியாகத் தந்து அவர்களைக் காக்கும் சூழ்நிலை அவருக்கு வந்தது. இதனை, "அவர் பார்த்து நெஞ்சில் பதிந்த இன்னொரு நாடகம் சிரவண குமாரன், இராமாயணத்தின் கிளைக்கதையாகிய இதில் வரும் சிரவணனைப் போல் பெற்றோரிடம் பேரன்பு பூன வேண்டும் எனும் முடிவை எடுக்க இந்த நாடகம் அவருக்கு உதவியது" (அறம் எனப்படுவது, ப.83) என அமுதன் குறிப்பிட்டுள்ளதின் மூலம் அண்ணல் அவர்கள் இக்கிளைக்கதையின் வாயிலாகத் தன் வாழ்வில் பெற்றோரிடம் அன்பு பூண்டு அவர்களைப் பேணிக் காக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைபிடித்தார் என்பதை அறியமுடிகிறது.

காந்தியச் சிந்தனை 'பெற்றோரைப் பேணுக' என்று அனைவரிடமும் அறிவிக்கிறது. ஆனால் அன்று தவத்தைப் புறக்கணித்து பெற்றோரைச் சுமந்து திரிந்தான் சிரவணன். இன்றோ! இத்திரு தமிழ்நாட்டில் இருக்கும் வயதான பெற்றோர்களை நினைக்கையில் கண்களில் குருதி ஓடுகிறது. எண்ணற்ற அனாதைக் குழந்தைகள் தாய், தந்தை இல்லையே எனக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், ஊருக்கு இரண்டாக முதியோர் இல்லங்கள் தோன்றி வருகின்றன. இதனை உணர்த்தும் விதமாக,

"இளமையில் பிள்ளைகளைக்
கான்வெண்ட் விடுதிகளில்
அடைக்கும் பெற்றோர்கள்!

முதுமையில் அவர்களை
முதியோர் இல்லத்தில் அடைக்கும் பிள்ளைகள்!
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

(கற்றதனால் ஆயபன், ப.132)

என்று அமுதன் சில கவிஞர்களின் கவிதைகளின் மூலம் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பெற்றோர்களின் மனதை ரணப்படுத்தி வாழும் வாழ்க்கை எதற்காக? நாளை அவர்களின் குழந்தைகளின் மூலம் அவர்களுக்கும் அதே கதிதான் என்பதையும், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்னும் பழமொழியின் மூலமும் உணரமுடிகிறது.

## போதைப் பொருள் குறித்த சிந்தனை

"போதைப் பொருள்கள்" என்ற கட்டுரையில் அமைந்துள்ள அறிஞர்களின் கருத்துக்கள் என்ற தொகுப்பிலிருந்து மக்களின் சிந்தனைக்கு எட்டும்படியாக இருக்க வேண்டும் என அமுதன் எடுத்துரைத்த மதுவைப்பற்றி காந்தியடிகளின் சிந்தனைகளாக இடம்பெற்றவை கீழ்க்காணுமாறு அமைகின்றன.

போதை பொருட்கள் பலவற்றை மனிதன் பயன்படுத்துகிறான் எனில் அவனது உடலிலுள்ள அனைத்து உள் உறுப்புகளும் தனது செயல்பாட்டை இழந்து விடுகின்றன. அதன் மூலம் மனிதன் இயங்க முடியாமல் முடக்கம் அடைகிறான். இதனை, "அபினி முதலிய போதையளிக்கும் பொருட்கள் மனிதனின் உள்ளத்தை முடமாக்குகின்றன, உடல் நலத்தைச் சவமாக்குகின்றன" (அறம் எனப்படுவது, ப.139) என அமுதன் குறிப்பிடுவதிலிருந்து, போதைப் பொருட்கள் பலவற்றை மனிதன் உண்கிறான். அவை அவனது உடலிலுள்ள உள் உறுப்புகளான நுரையீரல், கணையம், சுவாச உறுப்பு, மற்றும் கண் பார்வை போன்ற பிற உறுப்புக்களையும் செயல் இழக்கச் செய்து இறுதியில் மனிதனையே இயங்காமல் ஜடம் போல் காட்சிதரும்படி முடமாக்கி விடுகின்றன. மேலும் நாட்கள் செல்லச் செல்ல அனைத்து உறுப்புகளும் தனது ஆட்டத்தினை நிறுத்தி, உடலினுள் இறந்து சவமாகிக்கிடக்கும் நிலை வந்துவிடும் என்பதை அறிய முடிகிறது.

அமுதன் பார்வையின் வழி மக்கள் காந்தியத்தின் வழிசென்று, போதைப் பொருட்களைப் பற்றிய காந்தியச் சிந்தனைகளை ஏற்று, தனம் வாழ்விலும், தம் தலைமுறையினர் வாழ்விலும் ஒளிவிளக்கேற்ற வேண்டும். அண்ணல் பெற்றுத் தந்த சுதந்திரம் இறுதிவரை இருக்க, முதலில் மக்கள் இந்த மயக்கத்திலிருந்து விடுதலை பெறவேண்டும். அப்போதே அண்ணலின் சுதந்திரமானது என்றும் நிலைத்து நிற்கும்.



ISSN-9789387009271

9 789387 009271